# தளமகாநாட்டைஒட்டிய செய்தி
## தமிழீழ மக்கள் விடுதலைக்கழகத்தின்

கடந்த மாசி மாதம் (1986இல்) தொடர்ந்து 6 நாட்கள் கழகத்தின் தளமகாநாடு நடைபெற்றது. இது தள தலைமை அங்கத்தால் கூட்டப்பட்டு அதனால் நெறிப்படுத்தப்பட்டதொன்றாகும். இம்மகாநாடு கழக மத்திய தாபனத்துடன் பகைமை முரண்பாடுடையதோ அதற்கு எதிரானதொன்றோ அல்ல. தளத்தில் தனியானதொரு அமைப்பை உருவாக்குவதோ, கழகத்தை விட்டு உடைந்து செல்வதோ மகாநாட்டின் நோக்கமல்ல. மகாநாடு இவ்விதமான போக்கை முற்றுமுழுதாக நிராகரித்தது, மகாநாட்டின் பேராளர்களாக மத்தியஸ்தாபனத்தின் அங்கத்தவர்களில் பெரும்பாலானவர்கள் பங்குபற்றியதுடன் படைத்துறைச் செயலரும் [தோழர் கண்ணன்], அரசியல் செயலரும், [தோழர் வாசுதேவா] மகாநாட்டில் முழுமையாகப் பங்குபற்றினார்கள். அனைத்து தீர்மானங்களை முடிவெடுப்பதிலும், மகாநாட்டின் முடிவில் பொதுச்சபை அங்கத்தவர்கள் தெரிவுக்கான வாக்கெடுப்பிலும் கலந்துகொண்டு தமது பூரண ஒத்துழைப்பை மகாநாட்டிற்கு நல்கினர். கழகத்தின் தவறுகளைத் திருத்திக்கொள்வதும் குறிப்பாக கழகத்தில் நிலவிய அராஜகவாத குணாம்சத்தைத் திருத்திக்கொள்வதும், கூட்டுவேலை முறையை கழகத்துள் நிலைநிறுத்துவதுமே மகாநாட்டின் பிரதான நோக்கமாகும். இவ்விரு நோக்கத்தையும் நிறைவேற்றுவதில் மகாநாடு குறிப்பிட்டுச் சொல்லக்

கூடியளவு வெற்றியைப் பெற்றுள்ளது. ஒரு குழுவிற்குரிய குணும்சத்தையும் அதற்குத் தகுந்தாற்போன்ற அமைப்பு வடிவத்தையும் கொண்டிருந்ததே எமது கழகம். ஆயுதப்போராட்டத்தை முன்னெடுக்கும் ஒரு அரசியல் ஸ்தாபனத்திற்குரிய அமைப்பு வடிவத்தைப் பெறுவதற்கான அடிப்படையை உருவாக்குவதில் மகாநாடு வெற்றி பெற்றுள்ளது. மகாநாட்டுத் தீர்மானங்கள் சரியான முறையில் நடைமுறைப்படுத்தப்படும்போது எமது கழகம் மக்களின் அடிப்படைப் பிரச்சனைக்கு முகம் கொடுக்கக்கூடிய முறையிலான ஒரு புரட்சிகர அமைப்பாக மாறும் என உறுதியாக நம்புகிறோம்.

கழகத்துள் நடந்த அராஜகவாதம் மகாநாட்டில் கண்டிக்கப்பட்டது. நடந்த இத் தவறுகளுக்காக நாம் மனம் வருந்துகிறோம். இத்தவறுகள் நடப்பதற்குக் காரணமாயிருந்த ஒழுங்கற்ற அமைப்பு வடிவமும், தனிநபர்களின் ஆதிக்கங்களும் இல்லாதொழிக்கப்படுவதற்கான தீர்மானங்களை மகாநாடு எடுத்துள்ளதைப் பகிரங்கமாக அறியத்தருகின்றோம். இவ்வித தவறுகளில் ஈடுபட்டவர்கள் கண்டிக்கப்பட்டார்கள். இக்குற்றங்கள் விசாரணைக்குட்படுத்தப்படவேண்டும் எனவும், குற்றவாளிகளாகக் காணப்படுபவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் எனவும் மகாநாட்டில் முடிவெடுக்கப்பட்டது, மேலும் கழகத்துள் மாத்திரமல்ல மாற்று இயக்கங்களுடனும் நாம் அராஜகவாத நடவடிக்கைகளில் சந்தர்ப்பங்களில் ஈடுபட்டுள்ளோம். மாற்று விடுதலை அமைப்புகளுடன் ஐக்கியப்படுவதில் எமது இத்தவறுகளும் ஒரு தடையாக இருந்துள்ளதை மகாநாடு முழுமையாக ஏற்றுக்கொண்டது. இவ்வித நடவடிக்கைகளை மகாநாடு வன்மையாக கண்டித்தது. தொடர்ந்தும் இவ்வித தவறுகள் நடக்காது இருப்பதில் கழகத்தின் அனைத்து அங்கங்களும் விழிப்பாக இருப்போம் என மகாநாடு உறுதிபூண்டுள்ளது.

மக்களுடன் கொள்ளும் உறவிலுங்கூட கழகம் பல அராஜகவாத தவறுகள் மேற்கொண்டதை மகாநாடு ஏற்றுக்கொண்டது. இவை தொடர்ந்தும் நடைபெறுமல் தடுப்பதற்கான வழிவகைகளை மகாநாடு வகுத்துக்கொண்டது.

கழகத்தின் உயர் அங்கத்தில் அங்கம் வகித்த தோழர் சந்ததியார் கழகத்தின் உயர் அங்கத்தாலேயே மரணதண்டனைக்குள்ளாக்கப்பட்டார் என்பதையும் பகிரங்கமாக ஒத்துக்கொள்கிறோம். இவருக்கு வழங்கப்பட்ட தண்டனை பற்றியும் இவரைப்பற்றி ஸ்தாபனம் எடுக்க வேண்டிய கணிப்பீடு பற்றியுமான வாதப்பிரதிவாதங்கள் அமைப்பினுள் நடைபெற்று வருகின்றன. இது சம்பந்தமான முடிவுகள் மிக விரைவில் வெளிவிடப்படும்.

எமது அமைப்பிலுள்ள கோஷ்டி வாதத்தினுலும், அங்கத்தவர்களில் பலர் போதிய தியாகமின்மையையும், நீடித்த போராட்டத்திற்கு தயாரின்மையைக் கொண்டிருந்ததாலும் எமது அமைப்பினுள் இருந்து பலர் சமீபத்தில் வெளியேறியுள்ளார்கள். இது எமது ஸ்தாபன

உருவாக்கத்தினதும், அரசியல் மயப்படுத்தாமையினதும் விளைவாகும். இது திருத்தப்படவேண்டியது அவசியம் என்பதை உணர்கிறோம். அதே நேரத்தில் இக்காரணங்களால் விலகியவர்கள் எல்லோரும் சரியானவர்கள் அல்ல என்பதையும் நினைவுபடுத்த விரும்புகிறோம்.

எமது ஸ்தாபனத்தில் உட்கட்சி ஜனநாயகமின்றி இருந்ததாலும், ஸ்தாபனத்துள் தனிநபர்களின் ஆதிக்கங்கள் மேலோங்கி இருந்ததாலும் பல உயிரோட்டமுள்ள அரசியல் சக்திகள் எமது ஸ்தாபனத்தை விட்டு விலக நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளார்கள். இதற்காக நாம் மிகவும் வேதனையடைகிறோம், இவ்விதம் விலகியவர்களையும் முன்னைய காரணங்களால் விலகியவர்களையும் நாம் வெவ்வேறு கண்ணோட்டத்துடனேயே நோக்குகிறோம்.

இக் காரணங்களினால் வெளியேறிய "தீப்பொறி" உட்பட அனைத்து அரசியல் சக்திகளுடனும் விமர்சனம், சுய-விமர்சன அடிப்படையில் உறவை ஏற்படுத்திக்கொள்ள விரும்புகிறோம்.

இராணுவ விவகாரத்தைப் பொறுத்தவரையில் நாம் இதுவரை கடைப்பிடித்து வந்த கொள்கையின் தவறுகளை மகாநாடு விமர்சித்தது. இராணுவ நடவடிக்கைகளைப் பொறுத்தவரை ஒரு மந்தமான செயற்பாடு இருந்தது ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஏனைய இயக்கங்கள் மேற்கொண்ட தாக்குதல்களைக் கண்டிப்பதொன்றையே தொழிலாகக் கொண்டிருந்ததையும், இவ்வித கண்டனங்கள் ஏனைய இயக்கங்களுடனான ஐக்கியத்திற்குத் தடையாக இருந்ததையும் மகாநாடு கண்டித்தது. இதன் அர்த்தம் மாற்று இயக்கங்களின் நடவடிக்கைகள் அனைத்தும் சரியானவை என்பதல்ல. அவை விமர்சிக்கப்பட்ட முறை தவறானது என்பதேயாகும். எமது இராணுவ மார்க்கம் மீள் ஆய்வு செய்யப்படவேண்டும் எனவும், "காங்கிரஸ்" மூலம் மாற்றப்படவேண்டும் எனவும் மகாநாட்டில் முடிவெடுக்கப்பட்டது. காங்கிரஸ் வரையிலான கால இடைவெளியில் தற்காலிக இராணுவ மூலோபாயம் ஒன்று தயாரிக்கப்படுவதென மகாநாடு தீர்மானித்தது. அதற்கான கொள்கையையும் மகாநாடு வகுத்துக்கொண்டது.

பொதுச்சொத்தைப் பொறுப்பற்ற முறையில் வீண்விரயம் செய்யும் போக்கும், சிவில் நிர்வாகத்தை கையாள்வதில் மக்களின் உணர்வுகளை மதிக்காத போக்கும் எம் மத்தியில் நிலவுவதை மகாநாடு சுய-விமர்சனம்—விமர்சனம் செய்துகொண்டது. இத்தவறுகள் திருத்தப்படுவதற்கான அமைப்புச் சீர்திருத்தத்தை மேற்கொள்வது எனவும் மகாநாடு தீர்மானித்தது.

சுருக்கமாகச் சொல்வதானால் அராஜகவாதத்தை எதிர்ப்பதும் உட்கட்சி ஜனநாயகத்தை ஸ்தாபனத்துள் செயல்ப்பட வைப்பதும், தனி நபர்களின் ஆதிக்கத்துக்கும், கோஷ்டிவாத மோதல்களுக்கும் பதிலாகக் கூட்டுவேலை முறையை அமுல்படுத்துவதும் இயக்கங்களுக்கிடையில் ஐக்கியத்தை ஏற்படுத்துவதற்கான வேலை முறைகளைக்

கையாள்வதும், செயல் ஊக்கமுள்ள இராணுவ மூலோபாயத்தை வகுத்துக்கொள்ளவும், தளத்தின் அதாவது தமிழ் பேசும் மக்களின் யதார்த்த நிலையை புரிந்துகொண்ட வேலைத் திட்டத்தையும், தலைமையையும் உருவாக்குவதே இம் மகாநாட்டின் பிரதான நோக்கமாக இருந்தது. இந் நோக்கங்களை நிறைவேற்றுவதில் மகாநாடு பெருமளவு வெற்றியையும் ஈட்டியது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறோம். மகாநாட்டின் அனைத்து தீர்மானங்களும் ஏகமனதானவைகளே என்பதைக் கூறிக்கொள்வதில் பெருமைப்படுகிறோம்.

இத் தவறுகளைப் புரிந்துகொண்டு, இச் சுய விமர்சனத்தை மூலதனமாகக் கொண்டு ஸ்தாபனத்தை குழப்ப முற்படுவதும், இக்காரணங்களால் மக்களை விடுதலைப் போராட்டத்தில் இருந்து அந்நியப்படுத்த முற்படுதலையும் வன்மையாக எதிர்க்கிறோம்.

அனைத்து இயக்கங்களும் மக்களின் நலன்களை நிறைவேற்றக் கூடியனவாக இருக்கவேண்டும். மக்களின் தலைவர்களாகவும், சேவகர்களாகவும் செயல்ப்படக்கூடிய தன்மையுடையதாய் திகழவேண்டும். மக்களை அணி திரட்டி மக்கள் யுத்தம் ஒன்றை நடாத்தக்கூடியவைகளாக இருக்கவேண்டும். இயக்கங்களை இவ்வித குணும்சங்களுடையதாய் உருவாக்குதல் மக்களாகிய உங்களின் கடமைகளாகும். இயக்கங்களும், இயக்க அங்கத்தவர்களும் உங்கள் எஜமானர்களல்ல. நீங்கள் தான் இயக்கங்களின் எஜமானர்கள். உங்களுக்காகத்தான் இயக்கங்களே தவிர, இயக்கங்களுக்கான நீங்கள் அல்ல. ஆகவே எமது இயக்கம் தவறு செய்தால் அதைத் தட்டிக்கேட்கும் உரிமையும் கண்டிக்கும் உரிமையும் உங்களுக்கு உண்டு. அனைத்து அதிகாரங்களும் மக்களுக்கே.

எமது இயக்கத்தின் தவறுகளை சுயவிமர்சனம் செய்து கொண்டு எமது இயக்கத்தை மறுசீரமைப்பதில் ஈடுபட்டுள்ள எமது தோழர்களை தட்டிக்கொடுங்கள். எமது இயக்கத்தை மறுசீரமைக்கும் கடமையில் நீங்களும் உங்களாலான பங்களிப்பை வழங்குங்கள்.

## தியாகங்கள் என்றும் வீண்போனதுமில்லை!

## அடக்குமுறைக் குள்ளாக்கப்பட்டவர்களின் போராட்ட உணர்வுகள் என்றுமே தோற்கடிக்கப்பட்டதுமில்லை!!

"அனைத்து அடக்குமுறைகளையும் உடைத்தெறிவோம்"

தமிழீழம்,
மார்ச்சு—1986.

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம்
**(PLOT)**